## DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, TIRUNELVELI

O.S. No. 227 of 2010

| | | |
|---|---|---|
| Name | : திரு. இஸ்மத் யுனூன் | பி.வா.சா.1 |
| Father's Name | : செய்யது அகமத் | |
| Village | : மேலப்பாளையம் | |
| Taluk | : பாளையங்கோட்டை | |
| Calling | : வியாபாரம் | |
| Caste | : .. | |
| Religion | : .. | |
| Age | : 50 | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 23.11.2018

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை :**

நான் பி.வா.சா.ஆ.8 ஆவணத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.9 முதல் பி.வா.சா.ஆ.11 ஆவணங்களை பற்றியும் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அந்த ஆவணங்கள் வழக்கு சொத்து சம்பந்தப்பட்ட ஆவணங்கள் அல்ல என்றால் சரிதான். அந்த ஆவணங்கள் உச்சிமாகாளி, சங்கரம்மாள் மற்றும் ராக்கம்மாள், பலவேஷதேவர் ஆகியோர்களின் வாரிசுகள் என்று நிரூபிப்பதற்கான ஆவணங்கள். பி.வா.சா.ஆ.9 முதல் பி.வா.சா.ஆ.11 ஆவணங்கள் ராக்கம்மாள் மற்றும் சங்கரம்மாள் ஆகியோர் எழுதிக் கொடுத்ததாக தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். இந்த ஆவணங்களின் நகல்களை நான் எடுத்தது பற்றி அவர்களுக்கு தெரியாது என்றால் சரிதான். அவர்கள் விவரம் சொல்லி தான் நான் நகல் எடுத்தேன். இந்த ஆவணங்களை எழுதிக் கொடுத்தார்களா இல்லை என்று ராக்கம்மாள் மற்றும் சங்கரம்மாளை விசாரித்தால் தான் தெரியும் என்றால் சரிதான். இந்த ஆவணங்களை எழுதிக் கொடுத்தவர்கள் வீரபுத்திர தேவரின் மக்களா என்று அவர்களை விசாரித்தால் தான் தெரியும் என்றால் சரிதான். அவர்கள் ஊருடன் உள்ளார்கள்.

( வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது).

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, TIRUNELVELI**

O.S. No. 227 of 2010

| | | |
|---|---|---|
| Name | : திரு. இஸ்மத் யுனூன் | பி.வா.சா.1 |
| Father's Name | : செய்யது அகமத் | |
| Village | : மேலப்பாளையம் | |
| Taluk | : பாளையங்கோட்டை | |
| Calling | : வியாபாரம் | |
| Caste | : .. | |
| Religion | : .. | |
| Age | : 50 | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 03.12.2018

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி :

25 மற்றும் 26 பிரதிவாதிகள் எப்போது திருமணம் செய்தார்கள் என்றும் அவர்கள் தங்களது கணவருடன் எந்த ஊரில் குடியிருந்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.9 முதல் 11 வரையான ஆவணங்களில் கண்ட நபர்களுக்கும் வீரபுத்திர தேவருக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. நான் சார்பதிவாளர் அலுவலகத்தில் தாவா சொத்துக்குரிய ஆவணங்களுக்கு நகல் எடுத்து தொடர்பு இல்லாத நபர்களை போலியாக உற்பத்தி செய்து தாவா சொத்தை அபகரிக்க முயற்சி செய்கிறேன் என்றால் சரியல்ல. அதனால் தான் சொத்துக்குரிய அசல் ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்துக்குரிய ஆவணங்கள் எரிந்து போனதாக சொல்வதற்கு காவல் துறையில் நடவடிக்கை எடுத்ததற்கான ஆவணம் எதுவும் என் வசம் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.3ஐ விசாரித்த போது பி.வா.சா.ஆ.8 முதல் 11 வரையான ஆவணங்களை அவர் மூலமாக குறியீடு செய்யாததற்கு காரணம் என்ன என்றால் எதிர் தரப்பில் அவர்களை வாரிசு இல்லை என்று சொன்னதால் சங்கரம்மாள் வகையறாவை வாரிசுகள் என்று நிருபிப்பதற்காக தற்போது அந்த

ஆவணங்களுக்கு நகல் எடுத்தோம். அந்த ஆவணங்கள் பி.வா.சா.3ஐ விசாரிக்கும் போது என் கைவசம் இருந்தது என்றால் தேதி நினைவில்லை. பி.வா.சா.ஆ.9 2014லேயே நகல் எடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கை உற்பத்தி செய்வதற்காகத்தான் தொடர்பு இல்லாத ஆவணங்களை தற்போது தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.